# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **880/2016**

ஆணை எண். **173/2016**

நாள் : **30/11/2016**

**26/08/2016 நாளிட்ட தினமலர் நாளிதழ் செய்தி.** – **தாமாக முறையீடாக பதிவு செய்யப்பட்ட நாளிதழ் செய்தி**

**மண்டல அலுவலர்,**
**ஆலந்தூர் மண்டலம்(மண்டலம்–12),**
**சென்னை மாநகராட்சி.** – **எதிர் மனுதாரர்**

சென்னை மாநகராட்சி, ஆதம்பாக்கம் பகுதியில் உள்ள உத்தமர் காந்தி தெரு குறித்து, 26.08.2016 நாளிட்ட தினமலர் நாளிதழில், "**உத்தமர் காந்தி தெருவுக்கு விடிவு எப்போது ? குடிநீர், சாலை, விளக்கு இல்லாமல் தவிப்பு**" என்ற செய்தி வெளியிடப்பட்டிருந்தது. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப்பிரிவு 7(1)ன் கீழ், மேற்படி நாளிதழ் செய்தி குறித்து நடவடிக்கை எடுக்கும்பொருட்டு, 880/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. இச்செய்தி குறித்து ஆலந்தூர் மண்டல அலுவலர் தாக்கல் செய்துள்ள அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:-

## ஆணை:

சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலம், ஆதம்பாக்கம் உத்தமர் காந்தி தெரு குறித்து, 26.08.2016 நாளிட்ட தினமலர் நாளிதழில் "உத்தமர் காந்தி தெருவுக்கு விடிவு எப்போது? குடிநீர், சாலை, விளக்கு இல்லாமல் தவிப்பு" என்ற தலைப்பில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. 25 வீடுகள் உள்ள அந்தத் தெருவில் கழிவுநீர் இணைப்பைத் தவிர, குடிநீர், சாலை, தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகள் அங்கு இல்லை என்றும் குடிநீர் வாரியம் பணியை முடித்தால் தான் சாலை, தெருவிளக்கு அமைக்க முடியும் என மாநகராட்சி அதிகாரிகள் கூறுவதாகவும், இந்நிலையில் அந்தத் தெருவை சிலர் ஆக்கிரமித்து சொந்தம் கொண்டாடுவதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. மேற்படி செய்தி குறித்து இம்முறைமன்ற அறிவிப்பாணை அசல் மனு எண்.880/2016, நாள் 26.08.2016 மூலம் ஆலந்தூர் மண்டல அலுவலரின் அறிக்கை கோரப்பட்டு, மேற்படி மண்டல அலுவலரின் ந.க.எண்/ உ.பொ 163/4390/2016, நாள்: 11.11.2016 மூலம் அறிக்கை 15.11.2016 அன்று இம்முறை மன்றத்தில் பெறப்பட்டது. அவ்வறிக்கையில், மேற்படி தெரு நகர அளவை திட்ட பதிவேட்டின்படி ஆதம்பாக்கம் கிராமம், வார்டு – F, பிளாக் 14, நகர அளவை எண்.1, பரப்பு 0.06050 சதுரமீட்டர் "சாலை" அரசு புறம்போக்கு என தாக்கலாகி உள்ளது என்றும், தெருவின் முடிவில் குடியிருக்கும் திருவாளர்கள் என். ராஜா, என். வெங்கடேசன் மற்றும் திருமதி கஸ்தூரி ஆகியோர் உத்தமர் காந்தி தெருவின் முடிவில் உள்ள 115 அடி நீளமும் 12 அடி அகலமும் உள்ள பாதை தங்களுக்கு சொந்தம் என அசல் வழக்கு எண்.266/13-ல் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இடைக்காலத் தடை பெற்றுள்ளனர் என்றும் இத்தடை ஆணைக்கு எதிராக MP No.1/2015 in CRP(PD) 1625/2015ல் சென்னை உயர்நீதிமன்றத்தில், அதே தெருவில் வசிக்கும் திரு. கபாலி என்பவரால் அசல் வழக்கு எண்.266/2013ல் பெறப்பட்ட இடைக்காலத் தடைக்கு எதிராக தடை உத்தரவு பெற்றுள்ளதாகவும் மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும் குடிநீர் குழாய் அமைக்கும் பணியினை தமிழ்நாடு குடிநீர் வாரியம் மேற்கொண்டபோது, வழக்கு தொடுத்துள்ள நபர்கள் தடுத்ததால், குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் நிறுத்தப்பட்டதாகவும், அந்த சாலை அரசுக்கு சொந்தம் ஆனதா என்பதை உறுதி செய்து குடிநீர் குழாய் மற்றும் கழிவு நீர் வசதிகள் அமைக்க இருப்பதாகவும் குடிநீர் வாரியப் பணிகள் முடிவடைந்த பின்னர் சாலை மற்றும் தெருவிளக்கு அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார்.

3. இந்நேர்வில், சென்னை மாநகராட்சி, ஆதம்பாக்கம். உத்தமர் காந்தி தெரு, நகரநில அளவை திட்ட பதிவேட்டில் அரசுக்கு சொந்தமான சாலை என்று குறிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் உரிமை குறித்த வழக்குகளில் அரசு ஒரு தரப்பாக சேர்க்கப்பட்டுள்ளதா என்ற விவரம் மண்டல அலுவலரின் அறிக்கையில் இடம் பெறவில்லை. மேலும், அசல் மனு எண்.266/2013ல் பெற்ற இடைக்காலத் தடை சென்னை உயர்நீதி மன்றத்தால் மேற்குறிப்பிட்ட சீராய்வு மனுவில் நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ள நிலையில், அத்தெருவின் மீது தனியார் யாரும் உரிமை கோர வழிவகையில்லை என்றே கருதவேண்டியுள்ளது. எனவே, மேற்படி தெருவின் உரிமை குறித்து மேற்கூறிய சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் விரைவில் உறுதி செய்து, உத்தமர் காந்தி தெருவில் குடியிருக்கும் குடியிருப்புதாரர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து தருமாறு ஆலந்தூர் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2016 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30– ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

பெறுநர்

மண்டல அலுவலர்,
ஆலந்தூர் மண்டலம்,
மண்டலம் – 12,
சென்னை மாநகராட்சி,
எண். 1, புதுத் தெரு,
ஜி.எஸ்.டி. சாலை அருகில்,
ஆலந்தூர், சென்னை – 600 016..